# Tnpsc Model Question Paper 21 – General Tamil

Click Here to Download More Tnpsc Tamil Model Questions

1. அடைப்புக்குள் உள்ள சொல்லை பிரித்தெழுதக் கிடைப்பது: (எந்தமிழ்நா)
(அ) எந்+தமிழ்+நா (ஆ) எந்த+தமிழ்+நா **(இ) எம்+தமிழ்+நா** (ஈ) எந்தம்+தமிழ்+நா

2. அடைப்புக்குள் உள்ள சொல்லைத் தகுந்த இடத்தில் சேர்க்க: (சுட்டல்)
(அ) காட்டு விலங்குகளைச் ---------- தடை செய்யப்பட்டுள்ளது
**(ஆ) செய்த தவறுகளை --------- திருந்த உதவுகிறது**
(இ) தீயினால் ----- புண் உள்ளாறும்
(ஈ) தலையில் மல்லிகைப் பூ --------

3. சரியான இணைப்புச் சொல் தேர்க:
காயிதே மில்லத் அவர்கள் மகிழுந்தில் பயணம் செய்வதை விரும்பாதவர். அவர் எளிமையை விரும்பியவர்
**(அ) ஏனெனில்** (ஆ) அதனால் (இ) ஆகையால் (ஈ) அதுபோல

4. சரியான இணைப்புச் சொல்:
மாணிக்கம் அவர்கள் மகிழுந்தில் பயணம் செய்வதை விரும்பாதவர்.
அவர் எளிமையை விரும்பியவர்
(அ) எனவே **(ஆ) ஏனெனில்** (இ) மேலும் (ஈ) அதனால்

5. சரியான இணைப்புச் சொல் தருக:
மழை ------- உலகில் உயிர்கள் இல்லை
(அ) ஏனெனில் **(ஆ) இல்லையெனில்** (இ) ஆகையால் (ஈ) அதனால்

6. சரியான வினாச் சொல்லைத் தேர்ந்தெடு:
பட்டமரத்தின் வருத்தங்கள் -------
(அ) யார்? **(ஆ) யாவை?** (இ) எப்படி? (ஈ) எதற்கு?

7. சரியான வினாச் சொல்லைத் தேர்ந்தெடு:
------- பேர் சுற்றுலா சென்றனர்?
(அ) எத்தகைய (ஆ) எப்போது **(இ) எத்தனை** (ஈ) எவ்வாறு

8. சரியான வினாச் சொல்லைத் தேர்ந்தெடு:
"சான்றோர்க்கு அழகாவது -------"
(அ) எப்படி **(ஆ) எது** (இ) எங்கு (ஈ) ஏன்

9. பொருத்தமான காலம் அமைத்தல்:
"காண்" என்னும் சொல்லின் எதிர்காலத்தை தேர்ந்தெடுக்க:
(அ) காண்கிறான் **(ஆ) காண்பான்** (இ) கண்டான் (ஈ) கண்டேன்

10. கீழ்கண்டவற்றுள் எந்தச் சொல்லை இடம்பெற்றுள்ள பிற சொற்களுடன் இணைத்து புதிய சொல்லை உருவாக்க இயலாது? வான், மழை, விண், பூ, மணி
(அ) பூ (ஆ) வான் **(இ) விண்** (ஈ) மணி

11. சொற்களை இணைத்துப் புதிய சொற்களை உருவாக்குக:
சுவை, காப்பியம், பூ, வான், பொன், குறள்
(அ) காப்பியம் குறள் (ஆ) சுவை பூ **(இ) காப்பியச் சுவை** (ஈ) பூ பொன்

12. பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்று: இதைக் குடுத்துடுங்க
(அ) இதைக் குடித்து விடுங்கள் **(ஆ) இதைக் கொடுத்து விடுங்கள்**
(இ) இதைக் கொடுத்து விட்டீர்கள் (ஈ) இதைக் குடித்து வையுங்கள்

13. இரு பொருள் தருக: விளக்கு
(அ) மின் விளக்கு, விலங்கு (ஆ) குழல் விளக்கு, விளங்கு
(இ) விலக்கு அளித்தான், விளங்கினான் **(ஈ) அகல் விளக்கு, தெளிவுபடுத்து**

14. உண்மை–என்பதன் எதிர்ச்சொல் தருக:
(அ) வாய்மை (ஆ) தூய்மை **(இ) பொய்மை** (ஈ) மெய்ம்மை

15. இருபொருள் தருக: ஆறு
(அ) காடு, மலை (ஆ) குளம், குட்டை (இ) கோடு, வட்டம் **(ஈ) நதி, எண்**

16. குறில் நெடில் பொருள் வேறுபாடு: கொள்–கோள்
**(அ) பெறு–விண்மீன்** (ஆ) பெறு–பேறு (இ) கொடு–கலகம் (ஈ) பேறு–பெறு

17. கோடிட்ட இடங்களுக்குப் பொருந்திய சொற்களைத் தேர்க:
-------, நான் ---------- செல்கிறேன்
(அ) கொடு, கோடு (ஆ) மடு, மாடு (இ) அடு, ஆடு **(ஈ) விடு, வீடு**

18. கூற்று, காரணம் – சரியா? தவறா?
கூற்று: மாநகராட்சி சிறப்புக் கூட்டமொன்றில் "தலையைக் கொடுத்தேனும் தலைநகரைக் காப்போம்" என்று முழங்கினார் ம.பொ.சி.
காரணம்: ஆந்திரத்தின் தலைநகராக சென்னை இருக்க வேண்டும் என்பதை எதிர்த்து ம.பொ.சி. முழங்கிய முழக்கம் இது.
(அ) கூற்று தவறு; காரணம் சரி **(ஆ) கூற்று சரி; காரணம் சரி**
(இ) கூற்று சரி; காரணம் தவறு (ஈ) கூற்று தவறு; காரணம் தவறு

19. கலைச்சொல் அறிதல்: Linguistics
(அ) ஊடகம் **(ஆ) மொழியியல்** (இ) ஒலியியல் (ஈ) இதழியல்

20. கலைச்சொல் அறிதல்: Consonant
(அ) உயிரொலி (ஆ) ஒலியன் **(இ) மெய்யொலி** (ஈ) மூக்கொலி

21. கலைச்சொற்களை அறிதல்:
Space Technology – என்பதன் தமிழ்ச் சொல்லைக் கண்டறிக:
(அ) மீநுண் தொழில் நுட்பம் (ஆ) உயிரித் தொழில் நுட்பம்
**(இ) விண்வெளித் தொழில் நுட்பம்** (ஈ) விண்வெளிக் கதிர்கள்

22. கலைச்சொல் அறிக:
Launch Vehicle – என்ற சொல்லின் கலைச்சொல் யாது?
(அ) வானூர்தி **(ஆ) ஏவு ஊர்தி** (ஈ) ஏவுகணை (ஈ) நிலவு ஊர்தி

பத்தியிலிருந்து வினாவிற்கான சரியான விடையைத் தேர்ந்தெடு: (23–27)
தமிழர்கள் முற்காலத்திலேயே கப்பல் கட்டும் கலையை நன்கு அறிந்திருந்தனர். கப்பல் கட்டும் கலைஞர்கள் கம்மியர் என்று அழைக்கப்பட்டனர். இதனைக் "கலஞ்செய் கம்மியர் வருகெனக் கூஉய்" என்னும் மணிமேகலை அடியால் அறியலாம். தண்ணீரால் பாதிப்படையாத மரங்களையே கப்பல் கட்டப் பயன்படுத்தினர். நீர்மட்ட வைப்பிற்கு வேம்பு, இலுப்பை, புன்னை, நாவல் போன்ற மரங்களைப் பயன்படுத்தினர். பக்கங்களுக்கு தேக்கு, வெண்தேக்கு போன்ற மரங்களைப் பயன்படுத்தினர். நீளம், அகலம், உயரம் ஆகியவற்றைத் தச்சுமுழம் என்னும் நீட்டலளவையால் கணக்கிட்டனர்.

23. கப்பல் கட்டும கலைஞர்களை மணிமேகலை எவ்வாறு அழைக்கிறது?
(அ) கலம் **(ஆ) கம்மியர்** (இ) கூஉய் (ஈ) கூட்டம்

24. தச்சுமுழம் என்பது
(அ) முகத்தலளவை (ஆ) எண்ணளவை **(இ) நீட்டலளவை** (ஈ) கணக்களவை

25. முன்பக்கத்தை குதிரை போன்று வடிவமைப்பது எவ்வாறு அழைக்கப்பட்டது?
(அ) அரிமுகம் (ஆ) கரிமுகம் (இ) நரிமுகம் **(ஈ) பரிமுகம்**

26. நீர்மட்ட வைப்பிற்கு பயன்படுத்தப்பட்ட மரங்கள்
**(அ) நாவல்** (ஆ) தேக்கு (இ) பனை (ஈ) தென்னை

27. எதனால் பாதிப்படையாத மரங்களைக் கப்பல் கட்டப் பயன்படுத்தினர்?
(அ) காற்று **(ஆ) நீர்** (இ) நெருப்பு (ஈ) நிலம்

28. கீழ்காணும் தொடர்களில் (ஒரு–ஓர்) சரியாக அமைந்த தொடர் எது?
(அ) ஒரு அழகிய சிற்றூரில் ஓர் பரந்த குளம் இருந்தது
**(ஆ) ஒரு அழகிய சிற்றூரில் ஓர் இனிய குளம் இருந்தது**
(இ) ஒரு அழகிய சிற்றூரில் ஒரு இனிய குளம் இருந்தது
(ஈ) ஒரு அழகிய சிற்றூரில் ஓர் குளம் இருந்தது

29. ஒரு, ஓர் பயன்பாட்டில் பிழையற்ற தொடரைத் தேர்ந்தெடுக்க:
(அ) ஒரு ஊரில் ஒரு விவசாயி இருந்தார் (ஆ) ஓர் ஊரில் ஓர் விவசாயி இருந்தார்
**(இ) ஓர் ஊரில் ஒரு விவசாயி இருந்தார்** (ஈ) ஒரு ஊரில் ஓர் விவசாயி இருந்தார்

30. கீழ்காணும் தொடர்களில் (ஒரு–ஓர்) சரியாக அமைந்த தொடர் எது?
(அ) ஓர் பெரிய இடத்தில் அமர்ந்தான் **(ஆ) ஓர் இடத்தில் அமர்ந்தான்**
(இ) ஒரு அழகிய வனத்தில் அமர்ந்தான் (ஈ) ஒரு இடத்தில் அமர்ந்தான்

31. சொல்–பொருள்–பொருத்துக:
அ. மூத்தோர் 1. பெரியோர்
ஆ. மாற்றார் 2. வழி
இ. நெறி 3. இகழும்படி
ஈ. தூற்றும்படி 4. மற்றவர்

| | அ | ஆ | இ | ஈ |
|---|---|---|---|---|
| அ. | 3 | 2 | 1 | 4 |
| **ஆ.** | **1** | **4** | **2** | **3** |
| இ. | 2 | 3 | 4 | 1 |
| ஈ. | 1 | 2 | 3 | 4 |

32. சொல்–பொருள்–பொருத்துக:
அ. மழலை 1. மகிழ்ச்சி
ஆ. வனப்பு 2. குழந்தை
இ. பூரிப்பு 3. உடல்
ஈ. மேனி 4. அழகு

| | அ | ஆ | இ | ஈ |
|---|---|---|---|---|
| அ. | 1 | 4 | 2 | 3 |
| **ஆ.** | **2** | **4** | **1** | **3** |
| இ. | 3 | 2 | 4 | 1 |
| ஈ. | 1 | 2 | 3 | 4 |

33. சொல்–பொருள்–பொருத்துக:

| | | |
|---|---|---|
| அ. புலி | | 1. முழங்கும் |
| ஆ. யானை | | 2. அலறும் |
| இ. சிங்கம் | | 3. உறுமும் |
| ஈ. ஆந்தை | | 4. பிளிரும் |

| | அ | ஆ | இ | ஈ |
|---|---|---|---|---|
| **அ.** | **3** | **4** | **1** | **2** |
| ஆ. | 2 | 1 | 3 | 4 |
| இ. | 1 | 2 | 3 | 4 |
| ஈ. | 4 | 1 | 2 | 3 |

34. ஒருமை – பன்மை:
பிழையற்ற தொடரைக் கண்டறிக:
(அ) பசு கன்றை ஈன்றன (ஆ) பசு கன்றை ஈன்றார்கள்
**(இ) பசு கன்றை ஈன்றது** (ஈ) பசு கன்றை ஈன்றனர்

35. பொருத்தமுடைய கலைச்சொல்லைக் கண்டறிக:
**(அ) EMBLEM – சின்னம்** (ஆ) THESIS – அறிவாளர்
(இ) INTELLECTUAT – ஆய்வேடு (ஈ) SYMBOLISM – மொழியியல்

36. ஒருமை – பன்மை: பிழையற்ற தொடர் எது?
**(அ) குதிரை அவள் அருகில் வந்து நின்றது** (ஆ) குதிரை அவள் அருகில் வந்து நின்றாள்
(இ) குதிரை அவள் அருகில் வந்து நின்றன (ஈ) குதிரை அவள் அருகில் வந்து நின்றான்

37. பொம்மையை உடைத்தது யார்? – இது எவ்வகைத் தொடர்?
(அ) கட்டளைத் தொடர் **(ஆ) வினாத் தொடர்** (இ) செய்தித் தொடர் (ஈ) உணர்ச்சித் தொடர்

39. சொற்களின் கூட்டப் பெயர்கள் பொருத்துக:

| | | |
|---|---|---|
| அ. ஆ | – | குவியல் |
| ஆ. ஆடு | – | மந்தை |
| இ. புல் | – | நிரை |
| ஈ. கல் | – | கட்டு |

| | அ | ஆ | இ | ஈ |
|---|---|---|---|---|
| அ. | 1 | 3 | 4 | 2 |
| ஆ. | 1 | 2 | 3 | 4 |
| **இ.** | **3** | **2** | **4** | **1** |
| ஈ. | 4 | 3 | 2 | 1 |

39. கூட்டுப் பெயரை எழுதுக: எறும்பு
(அ) எறும்பு வரிசை **(ஆ) எறும்பு சாரை** (இ) எறும்பு புற்று (ஈ) எறும்பு கூடு

40. கூட்டப் பெயரை எழுதுக:
தென்னை
**(அ) தோப்பு** (ஆ) வயல் (இ) தோட்டம் (ஈ) காடு

41. சொற்களின் கூட்டப் பெயர்களைக் கண்டறிக:
கல் என்னும் சொல்லின் சரியான கூட்டுப்பெயர் எது?
(அ) கற்கட்டு **(ஆ) கற்குவியல்** (இ) கட்குலை (ஈ) கட்குவியல்

42. பொருத்தமான பொருளைத் தெரிவு செய்க:
இலைக்கு வேறு பெயர் -----

(அ) தலை **(ஆ) தழை** (இ) தளை (ஈ) தாளை

43. பொருத்தமான பொருளைத் தெரிவு செய்க:
வாழ்க்கையில் -------- மீண்டும் வெல்லும். இதைத் தத்துவமாய்த் ---------- கூத்து சொல்லும்.
(அ) வெற்றி–தோல்வி **(ஆ) தோற்பவை–தோற்பாவை** (இ) நன்மை–தீமை (ஈ) தோல்வி–வெற்றி

44. "அணிகலன், புன்னகை" என்ற பொருள்களைத் தரும் சொல்லைக் கண்டறிக:
(அ) அணி (ஆ) உவகை **(இ) நகை** (ஈ) மாலை

45. அகரவரிசைப்படி சரியாக அமைந்த வரிசையைத் தேர்க:
பைந்தமிழ், புதுமனை, பொதுவுடைமை, போராட்டம், பாராட்டு, பேருந்து, பதிவிறக்கம்
(அ) புதுமனை, போராட்டம், பாராட்டு, பைந்தமிழ், பேருந்து, பதிவிறக்கம், பொதுவுடைமை
(ஆ) பைந்தமிழ், புதுமனை, பொதுவுடைமை, போராட்டம், பாராட்டு, பேருந்து, பதிவிறக்கம்
**(இ) பதிவிறக்கம், பாராட்டு, புதுமனை, பேருந்து, பைந்தமிழ், பொதுவுடைமை, போராட்டம்**
(ஈ) புதுமனை, பைந்தமிழ், போராட்டம், பொதுவுடைமை, பாராட்டு, பேருந்து, பதிவிறக்கம்

46. சரியான இணையைக் கண்டறிக:
(அ) ஆஸ்தி–துன்பம் **(ஆ) அனுமதி–இசைவு** (இ) உஷார்–இயல்பு (ஈ) இம்சை–மணிமுடி

47. விடைகேற்ற வினா அமைக்க:
கோதை கவிதையைப் படித்தாள்
**(அ) கோதை எதைப்படித்தாள்?** (ஆ) கோதை எப்படிப் படித்தாள்?
(இ) கோதை எங்கே படித்தாள்? (ஈ) கோதை ஏன் படித்தாள்?

48. வேர்ச்சொல்லைக் கொடுத்து வினையாலணையும் பெயர் உருவாக்கல்:
தா
(அ) தந்தான் (ஆ) தந்து (இ) தந்த **(ஈ) தந்தவர்**

49. வாழ்க்கை – என்பதன் வேர்ச்சொல்லை எழுதுக:
**(அ) வாழ்** (ஆ) வாழு (இ) வாழ (ஈ) வாழ்ந்த

50. தந்தான் – வேர்ச்சொல்லைத் தருக:
(அ) தருதல் (ஆ) தரு **(இ) தா** (ஈ) தந்த

51. வேர்ச்சொல்லைத் தேர்வு செய்க:
கேட்டனன்
(அ) கேட் (ஆ) கேட்ட (இ) கேல் **(ஈ) கேள்**

52. வேர்ச்சொல்லைத் தேர்வு செய்க:
பார்த்தான்
(அ) பார்த்த **(ஆ) பார்** (இ) பார்த்து (ஈ) பார்த்தல்

53. ஒரு பொருள் தரும் பல சொற்கள்:
திங்கள்
**(அ) மாதம், கிழமை, சந்திரன், நிலவு** (ஆ) வாரம், நாள், சந்திரன், பகலவன்
(இ) கிழமை, சந்திரன், நாள், சூரியன் (ஈ) சந்திரன், சூரியன், பகலவன், பரிதி

54. ஒரு பொருள் தரும் பல சொற்கள்:
எழினி, கிழி, படாம், திரைச்சீலை எனும் சொற்கள் எதனைக் குறிக்கும்
**(அ) ஓவியம் வரையப்ப பயன்படும் துணி** (ஆ) நாடக அரங்கின் திரைச்சீலை
(இ) பாய்மரம் (ஈ) எழிலோவியம்

55. ஒலி வேறுபாடறிந்து பொருள் அறிக:
**(அ) வயலில் களை எடுத்தனர்** (ஆ) வயலில் கலை எடுத்தனர்
(இ) வயலில் கழை எடுத்தனர் (ஈ) வயளில் காளை எடுத்தனர்

56. கூரை, கூறை – பொருள் வேறுபாடு உணர்க:
(அ) கூறுதல், விளக்குதல் **(ஆ) வீட்டின் கூரை, புடவை**
(இ) மேல், கீழ் (ஈ) சீராக்குதல், கூராக்குதல்

57. மயங்கொலிப் பிழையற்ற தொடர்களை அறிக:
1. பறவையிடம் இருப்பது இறகு.
2. பறவைக்கு இருப்பது அலகு.
3. மன்னரிடம் இருப்பது வாள்.
4. சிவப்பு நிறத்தில் இருப்பது குறுதி
(அ) 1, 3, 4 சரி (ஆ) 2, 3, 4 சரி **(இ) 1, 2, 3 சரி** (ஈ) 2, 4, 3 சரி

58. ஆங்கிலச் சொல்லுக்கு நேரான தமிழ்ச் சொல் தருக:
Trust
**(அ) அறக்கட்டளை** (ஆ) தன்னார்வலர் (இ) சமூகப் பணியாளர் (ஈ) தொண்டு நிறுவனம்

59. ஆங்கிலச் சொல்லுக்கு நிகரான தமிழ்ச் சொல்லைத் தேர்ந்தெடு:
Equestrain
(அ) தலைமைப்பண்பு (ஆ) சமத்துவம் (இ) மனநோய் **(ஈ) குதிரையேற்றம்**

60. சொற்களை ஒழுங்குபடுத்துக:
(அ) ஏகலை கலையை அம்புவிடும் தமிழ என்றது **(ஆ) அம்புவிடும் கலையை ஏகலை என்றது தமிழ்**
(இ) தமிழ் ஏகலை கலையை அம்புவிடும் என்றது (ஈ) அம்புவிடும் கலையை தமிழ் ஏகலை என்றது

61. சரியான மரபுச் சொல்லைத் தேர்ந்தெடுத்து எழுதுக: கூடை ------
(அ) செய் **(ஆ) முடை** (இ) கட்டு (ஈ) படை

62. பிழை நீக்கி எழுதுக:
அந்தப் புஞ்சை ரோட்டோரத்தில் இருந்தது
**(அ) அந்தப் புன்செய் சாலையோரத்தில் இருந்தது** (ஆ) அந்தப் புஞ்சை சாலையோரத்தில் இருந்தது
(இ) அந்தப் புன்செய் ரோட்டோரத்தில் இருந்தது (ஈ) அந்தப் பூஞ்சை சாலையோரத்தில் இருந்தது

63. இன எழுத்துக்கள் அடிப்படையில் பொருந்தாச் சொல்லைக் கண்டறிக:
(அ) மஞ்சள் **(ஆ) கல்வி** (இ) வந்தான் (ஈ) தம்பி

64. பொருந்தாச் சொல்லைக் கண்டறிக:
(அ) குறிஞ்சி (ஆ) நெய்தல் (இ) முல்லை **(ஈ) மதுரை**

65. பண்பு, மஞ்சு, கண்டு, எஃகு
பொருந்தாச் சொல்லைக் கண்டறிக:
(அ) பண்பு (ஆ) மஞ்சு (இ) கண்டு **(ஈ) எஃகு**

66. இடர் ஆழி என்பதன் எதிர்ச்சொல்
(அ) துன்பக் கடல் (ஆ) துன்பச் சக்கரம் **(இ) இன்பக் கடல்** (ஈ) தூயச் சக்கரம்

67. எதிர்ச்சொல்லை எடுத்தெழுதுக:
உண்மை

**(அ) பொய்மை** (ஆ) விலகு (இ) தெளிவு (ஈ) சோர்வு

68. எதிர்ச்சொல்லை எடுத்தெழுதுதல்:
"மிசை" – என்பதன் எதிர்ச்சொல் என்ன?
**(அ) கீழே** (ஆ) மேலே (இ) இசை (ஈ) வசை

69. சேர்த்தெழுதுக: எதிர் + ஒலிக்க
(அ) எதிரலிக்க (ஆ) எதிர்ஒலிக்க **(இ) எதிரொலிக்க** (ஈ) எதிர்ரொலிக்க

70. சேர்த்தெழுதுதல்: நெடுமை + தேர் – என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல்
(அ) நெடுநேர் (ஆ) நெடுத்தேர் **(இ) நெடுந்தேர்** (ஈ) நெடுமைதேர்

71. தேம்பாவணி என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது
(அ) தேம்+பாவணி (ஆ) தேம்+அணி **(இ) தேம்பா+அணி** (ஈ) தேம்பு+பாவணி

72. சரியான நிறுத்தற்குறிகளை தேர்ந்தெடு
**(அ) "எது, என்ன, எங்கு, எப்படி" போன்றன வினாச்சொற்கள் ஆகும்**
(ஆ) எது, என்ன? எங்கு, எப்படி போன்றன வினாச்சொற்கள் ஆகும்
(இ) எது, என்ன, எங்கு, எப்படி போன்றன வினாச்சொற்கள் ஆகும்
(ஈ) "எது" "என்ன" "எங்கு, எப்படி போன்றன" வினாச்சொற்கள் ஆகும்

73. பொருத்தமான நிறுத்தற்குறிகளை அமைந்த தொடரைத் தேர்க:
(அ) வண்டியில் ஏறுங்கள் அவர் அன்புக் கட்டளையிட்டார்
**(ஆ) "வண்டியில் ஏறுங்கள்...!" அவர் அன்புக் கட்டளையிட்டார்**
(இ) வண்டியில் ஏறுங்கள்! அவர் அன்புக் கட்டளையிட்டார்
(ஈ) வண்டியில் ஏறுங்கள். அவர் அன்புக் கட்டளையிட்டார்

74. ஊர்ப்பெயரின் மரூஉவை எழுது: சைதாப்பேட்டை
(அ) சைதா (ஆ) சைதாப்பேட்டையூர் (இ) சாதாப்பேட்டை **(ஈ) சைதை**

75. ஊர்ப்பெயரின் மரூஉவை எழுது: தஞ்சாவூர்
**(அ) தஞ்சை** (ஆ) தாஞ்சூர் (இ) தஞ்சையூர் (ஈ) தாஞ்சை

76. கும்பகோணம் என்பதன் மரூஉ
**(அ) குடந்தை** (ஆ) கும்பம் (இ) கோணம் (ஈ) கோவை

77. ஊர்ப்பெயர்களின் மரூஉவை கண்டறிக: திருச்சிராப்பள்ளி என்பதன் மரூஉவைத் தேர்ந்தெடுக்க:
(அ) திருவை **(ஆ) திருச்சி** (இ) திருப்பள்ளி (ஈ) திருகை

78. பிறமொழிச் சொல்லுக்கு இணையான தமிழ்ச்சொல்லைக் கண்டறிக: காலிங்பெல்
(அ) அழைப்போசை (ஆ) அழைப்பாளர் (இ) அழைக்கும் ஒலி **(ஈ) அழைப்பு மணி**

79. பிறமொழிச் சொல்லுக்கான தமிழ்ச்சொல்லைக் கண்டறிக: "DIDACTIC COMPILATION"
**(அ) நீதிநூல் திரட்டு** (ஆ) பதிற்றுப்பத்து (இ) இரட்டைக்காப்பியங்கள் (ஈ) வேத மறை நூல்

80. பிறமொழிச் சொல்லுக்கு இணையான தமிழ்ச்சொல்: "ஆன்டிபயாடிக்" என்பதன் தமிழ்ச்சொல்
(அ) மருந்து (ஆ) மாத்திரை **(இ) நுண்ணுயிர் முறி** (ஈ) மூலிகை

81. "இங்கு நகரப் பேருந்து நிற்குமா?" என்று வழிப்போக்கர் வினவியதற்கு "அதோ, அங்கே நிற்கும்" என்று மற்றொருவர் கூறியது -------- விடை
(அ) வினா எதிர் வினாதல் விடை (ஆ) மறை விடை

**(இ) சுட்டு விடை** (ஈ) இனமொழி விடை

82. விடை வகைகள்:
ஊருக்குப் போவாயா? என்ற கேள்விக்குப் "போகமாட்டேன்" எனக் கூறல்
(அ) ஏவல் விடை (ஆ) இனமொழி விடை **(இ) மறை விடை** (ஈ) நேர்விடை

83. எவ்வகை விடை எனத் தேர்க:
"கடைத்தெரு எங்குள்ளது?" என்ற வினாவிற்கு இடப்பக்கத்தில் உள்ளது. எனக் கூறல்
(அ) ஏவல் விடை (ஆ) இனமொழி விடை **(இ) சுட்டு விடை** (ஈ) நேர்விடை

84. அலுவல் சார்ந்த கலைச்சொல்:
Entrepreneur – என்பதன் தமிழ்சொல்லைத் தேர்ந்தெடுக்க:
(அ) கணக்காயர் (ஆ) பொறியாளர் **(இ) தொழில் முனைவோர்** (ஈ) மருத்துவர்

85. அலுவல் சார்ந்த கலைச்சொல் தேர்ந்தெழுதுதல்:
Responsibility
(அ) செல்வம் (ஆ) லட்சியம் (இ) நற்பண்பு **(ஈ) கடமை**

86. அலுவல் சார்ந்த சரியான கலைச்சொல்லைக் கண்டறிக:
Escalator
**(அ) மின்படிக்கட்டு** (ஆ) மின்தூக்கி (இ) மின்னஞ்சல் (ஈ) மின் நூலகம்

87. கலைச்சொல்லிற்கானப் பொருளைத் தேர்ந்தெடு:
"HOMOGRAPH"
(அ) உயிரெழுத்து **(ஈ) ஒப்பெழுத்து** (இ) சிலையெழுத்து (ஈ) தலையெழுத்து

88. உவமையால் விளக்கப் பெறும் பொருத்தமான பொருளைத் தேர்ந்தெடுத்து எழுதுக:
"கிணறு வெட்டப் பூதம் கிளம்பியது போல" – உவமை கூறும் பொருள் தெளிக
(அ) தற்செயல் நிகழ்வு **(ஆ) எதிர்பாரா நிகழ்வு** (இ) எதிர்பார்த்த நிகழ்வு (ஈ) திட்டமிட்ட நிகழ்வு

89. உவமையால் விளக்கப்பெறும் பொருத்தமான பொருளைத் தேர்ந்தெழுதுதல்:
பசுமரத்து ஆணி போல
(அ) எளிதில் மனதில் பதியாமை (ஆ) எளிதில் மனதில் அகழாமை
(இ) எளிதில் மனதில் புரிதல் **(ஈ) எளிதில் மனதில் பதிதல்**

90. எவ்வகை வாக்கியம் எனக் கண்டெழுதுதல் – தன்வினை, பிறவினை, செய்வினை, செயப்பாட்டுவினை
"செயப்பாட்டு வினையைத் தெரிவுச் செய்"
**(அ) பாடல் அவளால் பாடப்பட்டது** (ஆ) பந்து உருண்டது
(இ) என் அண்ணன் நாளை வருவான் (ஈ) அவள் பாடினாள்

91. எவ்வகை வாக்கியம் எனக் கண்டெழுதுதல்:
கந்தனைத் திருந்தச் செய்தான்
(அ) செய்வினைத் தொடர் (ஆ) செயப்பாட்டு வினைத்தொடர்
(இ) தன்வினைத் தொடர் **(ஈ) பிறவினைத்தொடர்**

92. எவ்வகை வாக்கியம் எனக் கண்டெழுதுதல்:
கவிதா உரை படித்தாள்
(அ) வினாத் தொடர் **(ஆ) செய்வினைத்தொடர்**
(இ) கட்டளைத்தொடர் (ஈ) செயப்பாட்டு வினைத் தொடர்

93. விடைக்கேற்ற வினாவைத் தேர்ந்தெடுத்து எழுதுக:

"தமிழர்களின் பண்பாட்டுத் திருவிழாவாக விளங்கும் ஏறுதழுவுதல் இரண்டாயிரம் ஆண்டு காலத் தொன்மையுடையது"

(அ) வீர விளையாட்டான ஏறுதழுவுதல் எவ்வளவு நேரமுடையது?

(ஆ) இந்தியர்களின் பண்பாட்டுத் திருவிழாவாக விளங்குவது எத்தனை ஆண்டு?

**(இ) தமிழர்களின் பண்பாட்டுத் திருவிழாவாக விளங்கும் ஏறு தழுவுதல் எத்தனை ஆண்டுகாலத் தொன்மையுடையது?**

(ஈ) தமிழர்களின் பண்பாட்டுத் திருவிழாவாக விளங்கும் பொங்கல் எத்தனை ஆண்டுகாலத் தொன்மையுடையது?

94. விடைக்கேற்ற வினாவைத் தேர்ந்தெடுத்தல்:

தமிழகத்தின் வேர்ட்ஸ்வொர்த் என்று புகழப்படுபவர் கவிஞர் வாணிதாசன்

(அ) தமிழகத்தின் வேர்ட்ஸ்வொர்த் என்பது என்ன?

**(ஆ) தமிழகத்தின் வேர்ட்ஸ்வொர்த் என்று புகழப்படுபவர் யார்?**

(இ) தமிழகத்தின் வேர்ட்ஸ்வொர்த் யாரை குறிக்கும்?

(ஈ) புகழப்படும் வேர்ட்ஸ்வொர்த் யார்?

95. இருவினைகளின் பொருள் வேறுபாடு அறிதல்:

விரிந்தது–விரித்தது

(அ) மயில் தோகையை விரிதத்தால் இதழ்கள் விரிந்தன

(ஆ) பூக்கள் விரிந்ததால் மயில்கள் ஆடின

(இ) இதழ்கள் விரிந்ததால் மயில்கள் அகவின

**(ஈ) மழைக்காற்று வீசியதால், பூவின் இதழ்கள் விரிந்தன; மயில் தோகையை விரித்தது**

96. இருவினைகளின் பொருள் வேறுபாடு அறிக:

"பொருந்து, பொருத்து"

(அ) பொருத்து இருந்தால் காலம் கைகூடும்

**(ஆ) விடையினை சரியாக பொருத்தி, வேலையில் பொருந்து**

(இ) வேலையில் பொருத்தினால் இலாபம் அடையலாம்

(ஈ) பொறுத்தார் பூமி ஆள்வார்

97. இருவினைகளின் பொருள் வேறுபாடு அறிக:

சரியான தொடரைக் கண்டறி:

அறுத்து–அறுந்து

(அ) கதிர் அறுந்ததால் விரல் அறுத்தது (ஆ) கதிர் அறுந்து விரல் அறுந்தது

**(இ) கதிர் அறுத்தபோது விரல் அறுந்தது** (ஈ) கதிர் அறுந்தபோது விரல் அறுத்தது

98. சொற்களை ஒழுங்குப்படுத்தி சொற்றொடராக்குதல்:

**(அ) தம்மின்தம் மக்கள் அறிவுடைமை மாநிலத்து மன்னுயிர்க்கு எல்லாம் இனிது**

(ஆ) தம்மின் மக்கள்தம் அறிவுடைமை மாநிலத்து மன்னுயிர்க்கு எல்லாம் இனிது

(இ) தம்மின்தம் மக்கள் மாநிலத்து அறிவுடைமை மன்னுயிர்க்கு எல்லாம் இனிது

(ஈ) மன்னுயிர்க்கு மக்கள் மாநிலத்து அறிவுடைமை தம்மின்தம் எல்லாம் இனிது

99. கலைச்சொல் அறிக: Inscriptions

(அ) கையெழுத்துப்படி **(ஆ) கல்வெட்டு** (இ) கருத்துப்படம் (ஈ) சொற்சுருக்கம்

100. அகரவரிசைப்படி சொற்களை சீர் செய்க: பெண்கள், பாரதம், புதுமை, பீலி, பேருந்து, பூமி

**(அ) பாரதம், பீலி, புதுமை, பூமி, பெண்கள், பேருந்து** (ஆ) பீலி, பூமி, பெண்கள், பேருந்து, பாரதம், புதுமை

(இ) புதுமை, பெண்கள், பூமி, பாரதம், பேருந்து, பீலி (ஈ) பெண்கள், பேருந்து, பூமி, புதுமை, பீலி, பாரதம்